# 19 வது பெருநகர குற்றவியல் நீதிமன்றம்,

# எழும்பூர் @ அல்லிக்குளம், சென்னை – 3.

தேதி 19.09.2024.

| | | |
|---|---|---|
| சுருக்கு வழக்கு எண். | – | 13300/2023 |
| வாதி/எதிரி/நீதிமன்ற தரப்பு | – | வ.த.சா. 1 |
| பெயர் | – | பானுமதி |
| தந்தை பெயர் | – | சின்னராஜ் |
| வயது | – | 52 |

1873–ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டம் 10–வது வகையங்கள்படி இன்று 19.09.2024 என்னால் உறுதிமொழி கூறப்பட்டு சாட்சியம் அளிக்கப்படுகிறது.

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

நான் எம்.காம் வரை படித்துள்ளேன். நான் தனியார் பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து வந்தேன். எனக்கு உடல் நிலை சரியில்லாததால் தற்போது ஓய்வு பெற்றேன். என்து கணவர் பைனான்ஸ் கம்பெனியில் வேலை பார்க்கிறார். அவருடைய முழு நேர வேலையே அது தான். நான் வேலை பார்த்து நின்றபோது எனக்கு கொஞ்சம் பணம் வந்தது. அதே போல் எனது தந்தை இறந்ததால் எனக்கு குடும்பத்தின் மூலம் பணம் வந்தது. அதிலிருந்து தான் எதிரிக்கு கொடுத்தேன். எனக்கு ரூ 6 லடசம் மேற்கண்டவாறு வந்தது குறித்து எனது புகாரிலோ அறிவிப்பிலோ சொல்லவில்லை என்றால் இல்லை. எனது மகளுடை திருமணத்திற்க்காக சேர்த்து வைத்த பணத்தை தான் எதிரிக்கு கடன் கொடுத்ததாக எனது வழக்கில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். மேற்படி தொகையை நான் பெனிபிட் பண்டில் வைத்திருந்தேன். அதில் எவ்வளவு தொகை வைத்திருந்தேன் என்றால் ரூ. 4 லட்சம் வைத்திருந்தேன். மேற்பாடி பெனிபிட் பன்டிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக தான் எடுத்தேன். மேற்படி தொகை எடுத்ததற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்யலாம்.

2) எதிரி எவ்வளவு தொகை என்னிடம் கடன் கேட்டார் என்றால் ரூ. 6 லட்சம்

கேட்டார். ரூ. 6 லட்சத்தை மொத்தமாக கேட்கவில்லை. அவ்வப்போது கேட்டார். கடனை எதிரி வாங்கும்போது எதிரி 3 மாதத்தில் திருப்பி தருவதாக சொல்லி தான் வாங்கினார். கடனை நான் 2022 ம் ஆண்டு நவம்பரில் இருந்து 2023 ஜனவரி வரை மேற்படி தொகையை ஒரு மாத கால இடைவெளியில் கொடுத்தேன். எதிரிக்கும் எனக்கு இந்த பணபரிவர்த்தனை தவிர வேறு பரிவர்த்தனை இருக்கா என்றால் இல்லை. முதலில் வாங்கிய கடனான ரூ. 2 லட்சத்திற்கு வட்டி கொடுத்தாரா என்றால் ரூ. 10000/- வட்டி கொடுத்தார். முதல் மாதம் எதிரி வாங்கிய கடனுக்கு வட்டியே கொடுக்கவில்லை. நான் மேற்கொண்டு பணம் கொடுத்தது எதிரி குடும்பத்தை பற்றி தெரிந்ததாலும் நம்பிக்கையின் பேரிலும் கொடுத்தேன். எதிரி வாங்கிய தொகைக்கு முதலில் 2-3 மாதங்கள் தான் வட்டி கொடுத்தார். எதிரி வட்டி செலுத்தியதற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்யலாம்.

3) எனது புகாரில் எதிரி வட்டி 3 மாதங்கள் செலுத்தியதற்கான ஆவணங்கள் உள்ளது என புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் கடனை எதிரி உமாராணிக்கு மட்டும் தான் கொடுத்தேன் என்றால் சரிதான். வாதசாஆ-1 ஆவணத்தில் உள்ள மகேஷ் என்ற பெயர் உள்ளது அது யார் என்றால் எதிரியின் கணவர் ஆவார். எல்லா புரோநோட்டிலும் எதிரியின் கணவரின் கையெழுத்து உள்ளது என்றால் சரிதான். எனது புகாரில் எதிரியின் கணவர் மகேஷ் என்பவர் கடன் கேட்டதாகவும் அதே போல் புரோநோட்டில் இரண்டு பேரும் சேர்ந்து வாங்கினோமா என்றால் இல்லை. அதே போல புரோநோட்டில் சாட்சிகள் காளத்தில் யாரும் கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான்.

4) வாதசாஆ-3 ஆவணம் காசோலையில் உள்ள கையெழுத்தும் மற்ற விவரங்களும் ஒரே மையினால் எழுதப்பட்டுள்ளதா என்றால் ஒன்றாக தான் உள்ளது. காசோலையில் உள்ள எதிரியின் கையெழுத்தும் புரோநோட்டில் உள்ள எதிரியின் கையெழுத்தும் ஒன்றாக தான் உள்ளது.